**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097196

1. District : மாவட்டம் மதுரை   PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு   Year: ஆண்டு 2018   FIR No.: மு.த.அ. எண் 18/18   Date: நாள் 11.12.2018

2. (i) Act சட்டம்:   Sections பிரிவுகள்: Sec. 7 & 7A of ACT 1988
(ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: as Amended by
(iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: Prevention of Corruption (Amendment) ACT 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல்   Date to : நாள் வரை ① 23.11.2018 காலை 10.00 மணி
Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to : நேரம் வரை ② 26.11.2018 சுமார் காலை 11.00 மணியளவில்
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.12.2018   Time : நேரம் 16.00 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11.12.2018   Time : நேரம் 16.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   எழுத்து மூலமான புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 25 கி.மீ வட மேற்கு
Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி தமிழ்நாடு மின் பொறியாளர் அலுவலகம், சோழவந்தான், மதுரை மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P S   District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. வீ. பாண்டிவேல்   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் வீராச்சாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 18.04.1986   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் எல்லை பாதுகாப்பு படை வீரர்   (g) Address : முகவரி 28/A5, சுப்பாணி கோவில் தெரு, சோழவந்தான், மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) ① திரு. செந்தில்குமார், உதவி பொறியாளர் தமிழ்நாடு மின் பொறியாளர் அலுவலகம், சோழவந்தான்.
② திரு. மூர்த்தி, வயர்மேன், — 40 —

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

* GCP 240-34(Type 2) 90 000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ……………………. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V. [signature] 11.12.18 — [signature] 11.12.18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 11.12.18
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 17.45hrs.

Name: பெயர் தி. தேவியகலா
Rank: நிலை ……… No. எண் ………
காவல் ஆய்வாளர்
இ.த.க. பிரிவு
மதுரை

• GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 11.12.2018-ம் தேதி மாலை 16.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது, மதுரை மாவட்டம், சோழவந்தான், சப்பாணி கோவில் தெருவைச் சேர்ந்த வீராச்சாமி மகன் பாண்டிவேல் என்பவர் ஆஜராகி எழுத்துபூர்வமான புகார் கொடுத்தார். அதன் விவரம் பின்வருமாறு : அனுப்புநர், V.பாண்டிவேல், த/பெ வீராச்சாமி,28/A3, சப்பாணி கோவில் தெரு, சோழவந்தான். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் இந்திய எல்லை பாதுகாப்பு படையில் திரிபுரா மாநிலம் அகர்தலா என்ற இடத்தில் பணியாற்றி வருகிறேன். தற்போது 50 நாட்கள் வருடாந்திர விடுமுறையில் எங்கள் சொந்த ஊரான சோழவந்தான் வந்துள்ளேன். சோழவந்தானிலிருந்து மதுரை செல்லும் ரோட்டில் பத்மா கார்டன் என்ற இடத்தில் கடந்த 29.10.2014-ம் தேதியன்று பிளாட் எண் 4 மற்றும் 5 ல் சுமார் 8 செண்ட் காலி மனையிடத்தை எனது பெயரில் கிரையம் முடித்துள்ளேன். அதில் பிளாட் எண் 5-ல் 10 X 10 அளவில் சிறிய அறை கட்டி அதில் இரும்புத் தகடால் கூரை அமைத்துள்ளேன். மேற்படி சிறிய கட்டிடத்துக்கு புதிய மின் இணைப்பு வேண்டி கடந்த 20.11.2018-ம் தேதியன்று சோழவந்தான் மின் வாரிய அலுவலகத்திற்கு நேரில் சென்று முதல் மாடியில் பணியிலிருந்த உதவி பொறியாளர் திரு.செந்தில்குமார் என்பவரிடம் விசாரித்த போது அவர் என்னிடம், அலுவலகத்தின் முன்புறம் திரு.மூர்த்தி என்ற உரிமம் பெற்ற வயர்மேன் இருப்பார் என்றும் அவரைச் சந்தித்தால் விவரம் கூறுவார் என்றும் சொன்னார். எனவே, நான் திரு.மூர்த்தி என்பவரை சந்தித்து விவரம் சொன்னவுடன் அவர் உரிய படிவத்தில் TARIFF - V இணைப்பு வேண்டும் என்று நிரப்பி அத்துடன் எங்கள் பிளாட் எண் - 5-ன் கிரையப் பத்திரம், எனது ஆதார் அட்டை, புதிய கட்டிடத்துக்கு சோழவந்தான் நகராட்சியில் வரி செலுத்திய ரசீது ஆகியவற்றின் நகல்களை இணைத்து அதில் என்னிடம் கையெழுத்து பெற்று அந்தப் விண்ணப்பத்தை உதவி பொறியாளரிடம் கொடுக்கச் சொன்னார். விண்ணப்பம் நிரப்பிக் கொடுத்ததற்கு சேவைக் கட்டணமாக திரு.மூர்த்தி என்னிடம் ரூ.200/- பெற்றுக் கொண்டார். நான் அவர் நிரப்பிக் கொடுத்த மனுவை திரு.செந்தில்குமார் அவர்களிடம் கொடுத்தேன். அவர் அதனைப் பெற்றுக் கொண்டு, உங்களுக்கு போன் செய்யும் போது வாருங்கள், இடத்தை நேரில் பார்வையிட்ட பின்னர்தான் மின் இணைப்பு கொடுக்க முடியும் என்று கூறினார். அவர் சொன்னது போலவே, கடந்த 23.11.2018-ம் தேதியன்று காலை சுமார் 9.30 மணியளவில் எனது செல்போனில் தொடர்பு கொண்டு, மின்சார அலுவலகத்தில் இருந்து பேசுவதாகவும், நேரில் வந்து உதவி பொறியாளரை பிளாட்டுக்கு அழைத்துச் செல்லுமாறும் சொன்னார்கள். நான், உடனே

மின்வாரிய அலுவலகத்துக்கு சென்று உதவி பொறியாளர் திரு.செந்தில்குமார் அவர்களை நேரில் சந்தித்த போது, அவர் ஏற்கனவே என்னிடம் பெற்ற விண்ணப்பப் படிவத்தை எடுத்துப் பார்வையிட்டு, அதில் முதல் பக்கத்தில் கையெழுத்துப் போட்டார். பின்னர், அந்தப் விண்ணப்பத்தை எடுத்துக் கொண்டு என்னுடன் வந்து காலை 10 மணிக்கு இடத்தைப் பார்வையிட்டார். பின்னர், உங்கள் இடத்துக்கு கூடுதலாக ஒரு மின்கம்பம் ஊன்றி அதிலிருந்துதான் புதிய மின் இணைப்பு கொடுக்க வேண்டும் அதற்கு எஸ்டிமேட் தயாரித்து வாடிப்பட்டியில் உள்ள உட்கோட்டப் பொறியாளரிடம் ஒப்புதல் பெற வேண்டும் என்று கூறினார். நான் அவரிடம் எவ்வளவு பீஸ் கட்ட வேண்டும் என்று கேட்டதற்கு அவர் என்னிடம் புதிய மின் இணைப்புக்கு 1,600/- ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும் என்றும், தனியாக ரூ.5,500/- கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். நான் அவரிடம் நீங்கள் சொல்லும் தொகை அதிகமாக உள்ளதே என்று கேட்டேன். அதற்கு அவர் நான் உங்களிடம் பேரம் பேசமுடியாது, உங்களுக்கு படிவம் நிரப்பிக் கொடுத்த மூர்த்தியிடம் விவரம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார். எனவே, நான் கடந்த 26.11.2018-ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் மின்வாரிய அலுவலகம் சென்று உதவி பொறியாளர் திரு.செந்தில்குமாரை நேரில் சந்தித்து இன்று பீஸ் கட்டலாமா சார் என்று கேட்டேன். அவர் என்னிடம் ரூ.5,500/- கொடுத்தால்தான் பீஸ் கட்டமுடியும், மற்றவர்களிடம் பத்தாயிரம், இருபதாயிரம் வாங்குவோம், நீங்கள் ராணுவத்தில் இருப்பதால் நான் உங்களிடம் குறைவான தொகைதான் கேட்டுள்ளேன், எனவே நீங்கள் இனிமேல் என்னைப் பார்க்க வேண்டாம், மூர்த்தியிடமே ரூ.5,500/- பணத்தைக் கொடுத்து விடுங்கள், அதன் பின்னர் பீஸ் கட்டலாம் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். நான் மீண்டும் திரு.மூர்த்தியைச் சந்தித்து கேட்ட போது, ஏற்கனவே நான் உதவி பொறியாளரிடம் கொடுத்திருந்த விண்ணப்பப் படிவத்தை என்னிடம் எடுத்துக் காட்டிவிட்டு உதவி பொறியாளருக்குரிய ரூ.5,500/- கொடுத்தால்தான் அரசு கட்டணத்தைக் கட்டமுடியும் என்று சொன்னார், சரி, பணம் தயார் செய்த பின்னர் வருகிறேன் என்று சொல்லி வந்து விட்டேன். பின்னர், வீட்டுக்கு வந்து யோசித்துப் பார்த்தேன், எனது இடத்துக்கு புதிய மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு கட்டணம் தவிர கூடுதலாக லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இந்நிலையில், நான் சொந்த அலுவல் காரணமாக பாண்டிச்சேரி மற்றும் சென்னை சென்றுவிட்டதால் உடனடியாகப் புகார் கொடுக்க இயலவில்லை. எனவே, என்னிடம் ரூ.5,500/- லஞ்சம் கேட்கும் சோழவந்தான் உதவி மின் பொறியாளர் திரு.செந்தில்குமார் மற்றும் அவருக்கு உடந்தையாக இருக்கும் உரிமம் பெற்ற வயர்மேன் திரு.மூர்த்தி ஆகியோர் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இந்தப் புகார் மனுவைத் தயாரித்து, அத்துடன் உதவிப் பொறியாளர்

கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,500/ மற்றும் விண்ணப்படிவத்தின் முதல் பக்க ஜெராக்ஸ் நகல், பிளாட் எண் 5-ன் கிரையப் பத்திர நகல், எனது ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்துக் கொடுக்கிறேன். எனது புகார் மனு மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, sd.xxxxxxx (V. பாண்டிவேல்) 11.12.18. Sir, Received the written complaint on 11.12.2018 at 16.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Madurai Vigilance and Anti-corruption in Cr. No. 18/2018 u/s 7 and 7A of Prevention of corruption (Amendment) Act 2018 at 16.30 hrs and took up investigation sd. xxxxxxx (T.Suriyakala) 11.12.18, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original written complaint of Tr.V.Pandivel s/o. Veerachamy, 28/A 3, Sappanikovil street, Sholavandan, Madurai District and copy of Receipt No.8097196 is submitted to the Hon'ble Special Judge for Trail of cases under Prevention of Corruption Act, Madurai and copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

(T.Suriyakala) 11.12.18
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Madurai.